**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**

**Dated:15.05.2026**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

**C.C. No. 72/2014**

**Witness– D.W–1**

| | |
|---|---|
| Name | : ஆனந்தன் |
| Father's name | : வரதராஜுலு |
| Address | : 403, Pearl sardhar apartments, perungulathar, Chennai |
| Age | : 53 |

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969**)

(1969ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872ம் ஆண்டு இந்திய சாஷ்சிய அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

(Complainant absent. Accused present.)

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>:**

1. புகார்தாரர் எனக்கு 1994 முதல் 1998 வரை கோவில்பட்டியில் நான் டிராவல்ஸ் வைத்திருந்த போது, எதிரி ஆட்டோ கன்சல்டிங் பைனான்ஸ் வைத்திருந்த போது எனக்கு தெரியும். நான் 1998–ற்கு பிறகு நான் சென்னைக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். 2010ம் ஆண்டு நாலாட்டின்புதூரில் உள்ள எனது அம்மாவின் இடத்தை நான் விற்பதற்கு வேண்டி புகார்தாரரை கூப்பிட்டு நான் கேட்டு இருந்தேன். புகார்தார், கனகராஜ் என்ற புரோக்கரை அழைத்துவந்து இருவரும் சேர்ந்து அந்த சொத்தை விற்பனை செய்து தருவதாக சொன்னார்கள். நான், ஒரு சென்டிற்கு ரூ.60,000/– கேட்டதற்கு ஒரு சென்ட் ரூ.35,000/–ற்கு தான் போகும் என்று கனகராஜ் சொன்னார். நான் அதற்கு ரூ.45,000/–ற்கு விற்றுத்தறுமாறு கேட்டேன். அவர்கள், அந்த இடம் 1 ஏக்கர் 12 சென்ட் என்பதால் மெத்தமாக விற்கமுடியாது, பிளாட் போட்டு விற்பதற்கு என்னிடம் பவர் கேட்டார்கள்.

2. நான் 2011ம் ஆண்டு மேற்படி இருவருக்கும் பவர் எழுதி கொடுத்தேன். கனகராஜ் சரியாக எனக்கு பணத்தை கொடுத்துவிட்டார். புகார்தாரர் என்னிடம் கொஞ்சம் பொறுங்கள் அதிக விலைக்கு இடத்தை விற்று தருவதாக கூறினார். புகார்தாரர் இரண்டு வருடங்களாக சொத்தை விற்று தாராமல் இலுத்ததால் நான் பவரை ரத்து செய்ய சொன்னேன். நான் 2013ம் ஆண்டு கோவில்பட்டியில் எனது அம்மா விட்டிற்கு வந்தபோது எனக்கு

பணம் தேவைபடுவதாக நான் புகார்தாரரிடம் கேட்டதற்கு அவர் பணம் தன்னிடம் இல்லை என்றும், 3 காசோலைகள் மற்றும் புரோ நோட் கொடுத்தால் கடன் பைனான்ஸில் வாங்கிதருவதாக சொன்னார். நான் அதனால் கோவில்பட்டியில் HDFC வங்கியில் கணக்கு தொடங்கி 3 காசோலைகள் மற்றும் புரோ நோட்டை செல்வராஜிற்கு கொடுத்து, அவைகள் சென்னையில் உள்ள பைனான்ஸியர் திலிப் குமார் சேட்டிற்கு கொடுக்கப்பட்டது.

3. அந்த காசேலைகளின் எண்கள் முறையை 000001, 000002, 000003 ஆகிய நிரப்பப்படாத காசோலைகளை கையெப்பம் மட்டும் செய்திருந்தது. பொங்கல் கழித்து 20ம் தேதி ரூ.2,00,000/- மேற்படி சேட் ஏஜென்டிடம் கோவில்பட்டியில் உள்ள காமராஜ் சிலை எதிரே உள்ள கோமதி ஆட்டோ கன்சல்டிங் வைத்து வாங்கினேன். மேற்படி பணத்தை நான் மேற்படி கன்சல்டிங் வைத்து ஜுன் மாதம் திருப்பி கொடுத்துவிட்டேன். நான் மேற்படி காசோலைகள் மற்றும் புரோ நோட்டை நான் புகார்தாரரிடம் திருப்பி கேட்டதற்கு சில நாட்களில் சேட் அவைகளை திருப்பி அனுப்பிய பிறகு கொரியர் மூலம் எனக்கு அனுப்பிவிடுவதாக சொன்னார். நான் இரண்டு மூன்று தடவைகள் மேற்படி புகார்தாரரிடம் காசேலைகள் மற்றும் புரோ நோட்டை திருப்பி கேட்டதற்கு அவைகள் எனக்கு திருப்பி தரப்படவில்லை. மேற்படி சேட் பொதுவாக பணம் பெற்றவுடன் காசோலைகளை கிழித்து போட்டுவிட்டு ஆட்சேபனை இல்லை என்று கடிதம் கொடுத்துவிடுவதாக சொன்னார்கள்.

4. நான் தொடந்து புகார்தாரரிடம் மேற்படி சொத்தை விற்றுத்தறுமாறு கேட்டதற்கு நல்ல விலையில் விற்று தருவதாக காலம் கடத்தி வந்தார். நான் எனது மாமாவிடம் பவர் குறித்து விவரம் கேட்டதற்கு நான் பொதுவான பவர் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதையும் செய்யமுடியாது என்று எனது மாமா சொன்னார். சுமார் 6 மாதத்திற்கு முன்பு எனது கோவில்பட்டியில் உள்ள அம்மா வீட்டில் நீதிமன்ற அறிவிப்பு ஒட்டிய பிறகு இந்த வழக்கு குறித்து எனக்கு தெரியவந்துள்ளது. அதன் பிறகு வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜரானேன். நான் புகார்தாரருக்கு கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 489/2010 படி பொது அதிகார ஆவணம் எழுதிகொடுத்தேன். **(அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

5. கோவில்பட்டி புதுபேருந்து நிலையத்தில் வரதராஜுலு டிரான்ஸ்போர்ட் நிறுவனம் நீங்கள் நடத்திவருகிறீர்கள் என்றால் சரியல்ல, மதுரை சர்மா டிராவல்ஸ் மற்றும் NJK டிராவல்ஸ், கோயம்பத்தூர் ஆகிய நிறுவனங்கள்

பார்சல் புக்கிங் செய்து கொடுக்க சொன்னார்கள், என்னால் பார்க்கமுடியாது என்று சென்னதால் அந்நிறுவனங்கள் இரண்டு நபர்களை ஏற்பாடு செய்து கொடுத்து பார்க்க சொன்னார்கள் ஆனால் அவர்கள் தனியாக ஆபிஸ் பார்த்து சென்றுவிட்டார்கள், சுமார் 6 மாதத்திற்கு முன்பு மேற்படி சர்மா டிராவல்ஸ்யை நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் அதனால் அது கோவில்பட்டியில் மூடப்பட்டது. என் மீது இந்த வழக்கில் பிடியாணை நிலுவையில் இருந்தாதால் போலிஸ் தேடி வந்ததால் புதுபஸ்டாண்டில் நடத்தி வந்த நிறுவனத்தை மூடி விட்டேன் என்றால் சரியல்ல.

6. நான் சமீபமாக இரண்டு முதல் மூன்று வருடங்கள் டிராவல்ஸ் நடத்தி வந்தேன். கோவில்பட்டி பாரதிநகரில் உள்ளது எனது தாயார் வீடு. அந்த முகவரியில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது மீது இருந்த பிடியாணையை ரத்து செய்ய தாக்கல் செய்த மனுவில் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தான் கொடுத்துள்ளேன் என்றால் அது எனது முந்தைய வழக்கறிஞர் தான் எழுதினார். நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. எனது ஆதார் நகல் வழக்கில் உள்ளது. நான் மேற்படி ஆதார் முகவரியில் எனது மனைவியுடன் இருந்த போது ஆதார் எடுக்கப்பட்டது என்றும் நான் தற்போது விவாகரத்து ஆகி வழக்கில் உள்ள முகவரியில் எனது தாயாருடன் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் சென்னை ராயப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன்.

7. எனக்கு விவாகரத்து ஆகவில்லை. நான் தற்போது சென்னை ராயப்பேட்டை லாட்ஸில்தான் தங்கியுள்ளேன். நான் எனது முதல் விசாரணையில் 1994–1998 வரை நான் கோவில்பட்டியில் டிராவல்ஸ் நடத்தி வந்தபோது புகார்தாரர் ஆட்டோ கன்சல்டிங் வைத்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரர் லாரிதான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 1998ம் ஆண்டிற்கு பிறகு நான் சென்னைக்கு வேலைக்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் 1998ம் ஆண்டு சென்னையில் வேலைப்பார்த்து 2000ம் ஆண்டு அமெரிக்காவிற்கு சென்றேன். அதன் பிறகு நான் டெல்லி மற்றும் சென்னையில் வேலைப்பார்த்தேன். நான் அவர் வேலை பார்த்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, என்னிடம் ஆவணங்கள் உள்ளது.

8. 2010 ம் ஆண்டு நாலாட்டின்புதூரில் உள்ள நிலத்தை விற்பதற்கு நான் புகார்தாரர் மற்றும் கனகராஜிடம் பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, அதற்கான பவர் என்னிடம் உள்ளது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் நிலத்தை விலைப்பேசி அதற்கு அவர்கள் தொகை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில்

சொன்னது போல் எந்த பேச்சுவார்த்தையும் புகார்தாரர் மற்றும் கனகராஜிடம் பேசவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த பவர் பத்திரமும் கனகராஜிக்கும், புகார்தாரருக்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் பவரை ரத்து செய்ய சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் புகார்தாரர் எனக்கு கடன் பெற 2013ம் ஆண்டு காசோலைகள் மற்றும் புரோ நோட் கேட்டதாவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வங்கி கணக்கு தொடங்கி எழுதப்படாத காசோலைகள் சேட்டிடம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பணத்தை சேட்டிடம் திருப்பி கொடுத்துவிட்ட பிறகு புகார்தாரர் காசோலையை திருப்பி தரவில்லை என்று முதல் விசாரணையில் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த காசோலையும் 2013ம் ஆண்டில் புகார்தாரர் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

9. நான் சேட்டிடம் உண்மையில் கடன் பெற்று திரும்ப செலுத்தியிருந்தால் அதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, நான் சேட்டிடம் நேரடியாக பழக்கம் வைக்கவில்லை, புகார்தாரர் தான் அனைத்தையும் செய்தார். புகார்தாரர் தான் என்னிடம் சேட் மூலமாக பணம் ஏற்பாடு செய்வதாக சொன்னார், நான் எந்த சேட்டையும் பார்க்கவில்லை. நான் 25.06.2014 அன்று புகார்தாரரிடம் ரூ.4,00,000/– கடன் கேட்டு பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த கடனை திருப்பி செலுத்த நான் வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலை எனது வங்கி கணக்கில் பணம் இல்லாததால் திருப்பப்பட்டு அதற்கு எனக்கு புகார்தாரர் அறிவிப்பு அனுப்பி அதை நான் வேண்டுமென்றே வாங்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த போது மேற்படி சேட்டை அனுகி காசோலையை திரும்ப கேட்டீர்களா என்றால் நான் சேட்டிடம் நேரடியாக பழக்கம் வைக்கவில்லை, இந்த வழக்கிற்கு அறிவிப்பு ஒட்ட பட்ட பிறகுதான் இவ்வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். எனது அம்மா தகவல் சொல்லியும், அருகில் உள்ளவர்கள் தகவல் சொல்லியும் அறிவிப்பு ஒட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியவந்தது. நான் பவரை ரத்து செய்ய சார்பதிவாளரிடம் விசாரித்த போது எனது இடத்தை விற்பனை செய்தது எனக்கு தெரியவந்தது. நான் சொல்வது போல் எனது சொத்து விற்கப்பட்டிருந்தால் நான் காவல்துறையுல் புகார் கொடுத்திருப்போன் என்றால் தற்போது தான் அனைத்தையும் எடுத்துள்ளேன், இந்த வழக்கிற்கு பிறகு புகார் கொடுப்பேன். நான் பணம் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்து மோசடி செய்ததால் நான் மாற்றுமுறை ஆவண சட்டப்படி தண்டனைக்குறியவர் என்றால் சரியல்ல.

நான் காசோலை கண்ட தொகை, நஷ்ட ஈடு மற்றும் வழக்கு செலவு தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 – ற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 ல் உள்ள சொத்துக்களை கிரயம் வாங்கிய நபர்களிடம் பணத்தை பெற்று பணப்பற்று ரசீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 2010 ம் ஆண்டு எழுதப்பட்டுள்ள நிலையில் 2014 ம் ஆண்டு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய கடனுக்கும், எ.சா.ஆ.1 ற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Fast Track Court(ML),
Kovilpatti(FAC).